# கிராம அபிவிருத்தி திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# ග්‍රාම සංවර්ධන දෙපාර්තුමේන්තුව
# උතුරු පළාත
# DEPARTMENT OF RURAL DEVELOPMENT
# NORTHERN PROVINCE


உமது இல. / ඔබේ අංකය / Your No.

எனது இல. / මගේ අංකය / My No. NP/19/11/Dept/cir

12.08.2016

சுற்றறிக்கை இல: **05/2016** கிராம அபிவிருத்தி திணைக்களம் வடக்கு மாகாணம்.

சகல கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் / அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்
கிராம அபிவிருத்தி திணைக்களம், வடக்கு மாகாணம்.

**கிராம / மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களால் நடைமுறைப்படுத்தப்படும் சுழற்சிக்கடன் செயற்பாடு தொடர்பாக பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்.**

கிராம, மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களினால் நடைமுறைப்படுத்தப்படும் சுழற்சிக்கடன் செயற்பாடுகள் வெளிப்படைத் தன்மையாகவும் ஒழுங்கான படிமுறைக்கமையவும் செயற்படுத்தப்படும் நோக்கில் குறித்த சங்கங்களில் பொருளாளரினால் பின்வரும் அடிப்படையில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவேண்டும் என திணைக்களத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

1. **கடன் வழங்கல்.**

I) கடன் வழங்கலின் போது குறித்த பயனாளிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளும் நடைமுறை பின்பற்றப்பட வேண்டும் (மாதிரி விண்ணப்பபடிவம் இணைக்கப்பட்டுள்ளது) – கடன் விண்ணப்பப்படிவம் இணைப்பு I

II) கடன் விண்ணப்பம் வழங்கும் போது குறித்த வருடத்துக்கான சந்தா செலுத்தப்பட்டுள்ளதா? என சங்கத்தின் பொருளாளரினால் பரிசீலிக்கப்பட்ட பின்னர் விண்ணப்பபடிவம் வழங்கப்படல் வேண்டும்.

III) கடன் விண்ணப்பங்கள் அனைத்தும் சங்கத்தின் பொதுச்சபை / நிர்வாகசபைக் கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டு கடன் வழங்கப்படவுள்ள பயனாளிகள் தெரிவு செய்யப்பட வேண்டும்.

IV) கடன் வழங்கலுக்கான பணவிடுவிப்பு அனுமதியை பெற்றுக்கொள்வதற்கு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் பொருளாளர் செல்லும் போது கடன் வழங்கப்படவுள்ள பயனாளிகளின் விபரங்கள் அடங்கிய தொகுப்பு படிவம் (Summary Sheet) பூரணப்படுத்தப்பட்டு எடுத்துச் செல்லப்படல் வேண்டும். கடன் பெற்றுக் கொள்ளும் பயனாளிகளின் விபரத்தினை கணனியில் தரவேற்றம் செய்வதற்கு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு தேவைப்படும் தகவல்களை உள்ளடக்கியுள்ளமையால் குறித்த படிவம் அவசியமானதாகும். (மாதிரிபடிவம் இணைக்கப்பட்டுள்ளது) - .சுயதொழில் கடன் பெறுவோர் விபரம் இணைப்பு II.

V) பயனாளிகளுக்கு கடன் பணம் வழங்கப்படும் போது பொருளாளரினால் கொடுப்பனவு


இல.340, பருத்தித்துறை வீதி ஆனைப்பந்தி, நல்லூர். யாழ்ப்பாணம்.
අංක.340, පේදුරු තුඩුව පාර. ආනෛප්පන්ති. නල්ලූර්. යාපනය
No.340, Point Pedro Road Anaippanthi. nallur, Jaffna

பணிப்பாளர் / අධ්‍යක්ෂිකා / Director 021 320 2275
அலுவலகம் / කාර්යාලය / Office 021 205 7108
தொலைநகல் / ෆැක්ස් / Fax 021 205 7109
மின்னஞ்சல் / ඊ-මේල් / E-mail nprural@gmail.com

சிட்டை (Voucher) தயாரிக்கப்பட்டு பணம் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்பம் பெறப்பட்ட பின்னர் கடன் வழங்கப்படல் வேண்டும். (கொடுப்பனவுச்சிட்டை முறைமையை இதுவரை பயன்படுத்தாத சங்கங்கள் இனிவரும் காலங்களில் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். இது தொடர்பான அறிவுறுத்தல் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரினால் வழங்கப்படல் வேண்டும்.)

2. கடன் அறவீடு.

I) கடன் அறவீடு மேற்கொள்ளப்படும் போது பணம் பெற்றுக் கொண்டமைக்கான பற்றுச்சிட்டை (Receipt) பொருளாளரினால் வழங்கப்படுதல் வேண்டும். - (பற்றுச்சீட்டு முறைமை இல்லாத சங்கங்கள் இதனை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்).

II) பற்றுச்சிட்டையில் கடன் தவணைப் பணம், வட்டிப்பணம் மற்றும் தாமதவட்டி/ தண்டப்பணம் பெறப்பட்டிருப்பின் அனைத்தும் தெளிவாக குறிப்பிடப்படுதல் வேண்டும்.

III) கடன் அறவீடுகள் அனைத்தும் பொருளாளரினால் பேணப்பட வேண்டிய அங்கத்தவர் கடன் அறவீட்டு பதிவேட்டில் (ஒவ்வொரு பயனாளிக்கும் தனியாக ஒதுக்கப்பட்டுள்ள பக்கத்தில்) மாதாந்தம் பொருளாளரினால் பதிவு செய்யப்படுதல் வேண்டும். (பதிவேட்டின் மாதிரி இணைக்கப்பட்டுள்ளது) – அங்கத்தவர் கடன் பதிவேடு - இணைப்பு III

IV) கடன் அறவீடுகள் அனைத்தும் மாத இறுதியில் உரிய வங்கி கணக்கில் பொருளாளரினால் வைப்புச் செய்யப்படல் வேண்டும்.

V) குறித்த மாதத்தில் அறவீடு செய்யப்பட்ட கடன் அறவீட்டு அறிக்கை அடுத்து வரும் மாதத்தின் 05ம் திகதிக்கு முன்னர் பொருளாளரினால் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். - இணைப்பு IV

VI) கடன் அறவீட்டு அறிக்கையினை சமர்ப்பிக்க வரும்போது பொருளாளர், கடன் அறவீடு வைப்பு செய்யப்பட்ட வங்கிப்புத்தகம், கடன் அறவீட்டுக்கு பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட பற்றுச்சிட்டையின் காபன்பிரதி அடங்கிய பற்றுச்சிட்டை புத்தகம் மற்றும் அங்கத்தவர் கடன் பதிவேடு என்பவற்றை கொண்டுவருதல் வேண்டும்.

VII) *பிரதேச செயலகங்களில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தருடன் இணைந்து*

கிராம அபிவிருத்தி திணைக்களம்
வடக்கு மாகாணம்
ග්‍රාම සංවර්ධන දෙපාර්තුමේන්තුව
උතුරු පළාත
**DEPARTMENT OF RURAL DEVELOPMENT**
**NORTHERN PROVINCE**

உமது இல. / ඔබේ අංකය / Your No.

எனது இல. / මගේ අංකය / My No. NP/19/11/Dept/cir

---

*பணியாற்றும் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் (அபிவிருத்தி உத்தியோகத்தர் இல்லாத சந்தர்ப்பத்தில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்) பொருளாளரினால் சமர்ப்பிக்கப்படும் மேற்குறிப்பிட்ட அறிக்கை மற்றும் புத்தகங்களை பரிசீலித்து உரியமுறையில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதனை உறுதிப்படுத்தி கடன் பதிவேட்டில் சிற்றொப்பம் இடுவதுடன், பொருளாளரினால் உரியமுறையில் பதிவுகள் மேற்கொள்வதற்கு உதவி செய்வார்கள்.*

மேற்குறிப்பிட்ட நடைமுறைகளை பின்பற்றும் போது பொருளாளருக்கு ஏற்படும் வேலைப் பழுவை கருத்தில் கொண்டு பொருளாளரினால் மாதாந்தம் அறவீடு செய்யப்படும் **வட்டிப்பணத்தில் சங்கங்களால் தீர்மானிக்கப்படும் வீத (%) தொகையினை (20% இற்கு மேற்படாதவகையில்)** கடன் அறவீட்டு நடவடிக்கையில் ஈடுபடும் பொருளாளர் / வங்கியாளர் போன்ற குறித்த கடமையை மேற்கொள்பவருக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவாக வழங்குவதற்கான அனுமதியினை திணைக்களம் வழங்கும்.

**அடுத்துவரும் மாதத்தின் 05ம் திகதிக்கு முன்னர்** கடன் அறவீட்டு அறிக்கையை கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் சமர்ப்பித்து குறித்த மாதகடன் அறவீட்டுக்காக பொருளாளர் / வங்கியாளர் பெற்றுக் கொள்ளக்கூடிய ஊக்குவிப்பு தொகைக்கான எழுத்து மூலமான அனுமதியை கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் பெற்றுக்கொண்ட பின்னரே குறித்த கொடுப்பனவை பொருளாளர் / வங்கியாளர் பெற்றுக்கொள்ளமுடியும். இதற்காக பொருளாளர் / வங்கியாளர் சிறிய குறிப்பேடு (03 கட்டு கொப்பி) ஒன்றை பேணுவது பொருத்தமானதாகும்.

எனவே, மேற்குறிப்பிட்ட விடயங்களை கருத்தில் கொண்டு சங்கங்களால் நடைமுறைப்படுத்தப்படும் சுழற்சிக்கடன் திட்டங்களை வினைத் திறனாக்குவதற்கு திணைக்களத்தால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மேற் குறித்த விடயம் தொடர்பான விளக்கத்தினை கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் / அபிவிருத்தி உத்தியோகத்தர் தங்கள் பிரதேச செயலர் பிரிவில் சுழற்சி முறைக்கடன் செயற்பாட்டில் ஈடுபடும் சங்க நிர்வாகத்திற்கு தெளிவுபடுத்தும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

ஜே.ஜே.சி.பெலிசியன்
பணிப்பாளர்
கிராம அபிவிருத்தி
வடக்கு மாகாணம்

ஜே.ஜே.சி. பெலிசியன்
மாகாணப் பணிப்பாளர்

---

இல.340, பருத்தித்துறை வீதி
ஆனைப்பந்தி, நல்லூர். யாழ்ப்பாணம்.
අංක.340, පේදුරු තුඩුව පාර.
ආනෙප්පන්ති. නල්ලූර්. යාපනය
No.340, Point Pedro Road
Anaippanthi. nallur, Jaffna
பணிப்பாளர் / අධ්‍යක්ෂිකා / Director 021 320 2275
அலுவலகம் / කාර්යාලය / Office 021 205 7108
தொலைநகல் / ෆැක්ස් / Fax 021 205 7109
மின்னஞ்சல் / ඊ-මේල් / E-mail nprural@gmail.com

உமது இல. / ඔබේ අංකය / Your No.

எனது இல. / මගේ අංකය / My No. NP/19/11/Dept/cir

கிராம அபிவிருத்தி திணைக்களம்
வடக்கு மாகாணம்.

பிரதி:

1. செயலாளர் -மீன்பிடி, போக்குவரத்து அமைச்சு, வடக்கு மாகாணம் - தயவுடன் தங்களின் தகவலுக்காக.
2. அரசாங்கஅதிபர் ………………………….. - தயவுடன் தங்களின் தகவலுக்காக.
3. பிரதேச செயலாளர் -……………………….தயவுடன் தங்கள் நெறிப்படுத்தலுக்காகவும் ஒத்துழைப்புக்காகவும்
4. மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்……………… -தகவலுக்காகவும் நெறிப்படுத்தலுக்காகவும்

இல.340, பருத்தித்துறை வீதி
ஆனைப்பந்தி, நல்லூர். யாழ்ப்பாணம்.
අංක.340, පේදුරු තුඩුව පාර.
ආනෙපේපන්ති. නල්ලූර්. යාපනය
No.340, Point Pedro Road
Anaippanthi. nallur, Jaffna
பணிப்பாளர் / අධ්‍යක්ෂිකා / Director 021 320 2275
அலுவலகம் / කාර්යාලය / Office 021 205 7108
தொலைநகல் / ෆැක්ස් / Fax 021 205 7109
மின்னஞ்சல் / ඊ-මේල් / E-mail npruralgmail.com

# கிராம அபிவிருத்தி திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# ග්‍රාම සංවර්ධන දෙපාර්තුමේන්තුව
# උතුරු පළාත
# DEPARTMENT OF RURAL DEVELOPMENT
# NORTHERN PROVINCE

உமது இல. / ඔබේ අංකය / Your No.

எனது இல. / මගේ අංකය / My No. NP/19/11/Dept/cir


16.02.2017

சுற்றுநிருபம் 02/2017

சகல மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், தையல் போதனாசிரியர்கள் மற்றும் சகல உத்தியோகத்தர்கள் கிராம அபிவிருத்தி திணைக்களம் வடக்கு மாகாணம்.

**இலத்திரனியல் முறையின் ஊடாக தகவல்களை பரிமாற்றம் செய்தல்**

1. காகிதத்திலான தகவல் பரிமாற்றத்தின் கீழ் உள்ள சில தடங்களையும், விரையங்களையும் கருத்தில் கொண்டு இலத்திரனியல் ரீதியாக தகவல்களை பரிமாற்றம் செய்வதற்கு ஏற்கனவே சகல மாவட்ட கிராம அபிவிருத்தி அலுவலகங்கள், பிரதேச கிராம அபிவிருத்தி அலுவலகங்கள் என்பனவற்றிற்கு இலத்திரனியல் தபால் முகவரிகள் (**Email Address – User Name**) வழங்கப்பட்டுள்ளது.
    - இதனைப் பயன்படுத்தி தகவல்களை பரிமாற்றம் செய்யுமாறு சகல சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களும் அறிவுறுத்தப்படுகின்றது.
    - கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பிரதேச செயலகங்களிலிருந்து தகவல்களை கிராம அபிவிருத்தி திணைக்களம் வடக்கு மாகாணத்திற்கு அனுப்பும் போது தங்கள் மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு அதன் பிரதி அனுப்படல்வேண்டும்.
    - Email ஊடாக தகவல்களை பரிமாற்றும் பொழுது கிடைக்கப் பெற்றது என்பதை அனுப்பியவருக்கு தெரியப்படுத்தப்படல்வேண்டும் (Acknowledgement)
    - சகல அலுவலர்களும் காலை 8.30 மணிக்கும் மாலை 3.30 மணிக்கும் தினமும் Email இனை பார்வையிட அறிவுறுத்தப்படுகின்றனர். அத்துடன் விசேடமாக Email அனுப்ப வேண்டிய நிலைமை ஏற்படின் தொலைபேசியூடாக தகவலினை உரியவர்களுக்கு அறிவிக்க வேண்டும்.

2. கிராம அபிவிருத்தித் திணைக்களத்தில் இருந்து Email ஊடாக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு அனுப்பப்படும் கடிதங்களின் பிரதி அவ் மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு இடப்பட வேண்டும். இக் கடிதங்கள் தங்களுக்கு கிடைக்கப் பெற்றமை தொடர்பில் சகல உத்தியோகத்தர்களும் உறுதிப்படுத்துவது கட்டாயமானதாகும் என்பதுடன் மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அக்கடிதம் தொடர்பாக தொடர் நடவடிக்கையினை பின்பற்றுதல் வேண்டும். மாவட்ட உத்தியோகத்தர்களுக்கு அனுப்பப்படும் கடிதங்களும் இந் நடைமுறைகளுக்கேற்பவே பின்பற்றப்படல் வேண்டும்.

3. மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரின் சிபார்சுடன் வடக்கு மாகாண கிராம அபிவிருத்திணைக்களத்திற்கு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களினால் அனுப்படவேண்டிய சகல கடிதங்களும் Email ஊடாக மாவட்ட உத்தியோகத்தருக்கு அனுப்பப்பட்டு அவர் ஊடாகவே அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.


இல.340, பருத்தித்துறை வீதி ஆனைப்பந்தி, நல்லூர். யாழ்ப்பாணம்.
අංක.340, පේදුරු තුඩුව පාර. ආනෙපන්ති. නල්ලූර්. යාපනය
No.340, Point Pedro Road Anaippanthi. nallur, Jaffna

பணிப்பாளர் / අධ්‍යක්ෂිකා / Director 021 320 2275
அலுவலகம் / කාර්යාලය / Office 021 205 7108
தொலைநகல் / ෆැක්ස් / Fax 021 205 7109
மின்னஞ்சல் / ඊ-මේල් / E-mail nprural@gmail.com

# கிராம அபிவிருத்தி திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# ග්‍රාම සංවර්ධන දෙපාර්තුමේන්තුව
# උතුරු පළාත
# DEPARTMENT OF RURAL DEVELOPMENT
# NORTHERN PROVINCE

உமது இல. / ඔබේ අංකය / Your No.

எனது இல. / මගේ අංකය / My No. NP/19/11/Dept/cir

4. கையெழுத்து இடப்பட வேண்டிய சகல கடிதங்கள் மற்றும் தகவல்கள் உரிய உத்தியோகத்தரின் கையொப்பத்துடன் Scanner மூலம் பிரதி செய்யப்பட்டு அனுப்பப்படல் வேண்டும். அத்துடன் சகல தகவல் பரிமாற்றங்களும் தங்கள் உத்தியோகபூர்வ Email ஊடாகவே மேற்கொள்ளப்பட வேண்டியது கட்டாயமானது ஆகும்.

5. தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள Computer, Scanner, Printer, Dongle போன்ற இலத்திரனியல் சாதனங்களினை வினைத்திறனாகவும், பக்குவமாகவும் பயன்படுத்தி விரைவாகவும், இலகுவாகவும் இலத்திரனியல் தகவல் பரிமாற்றம் மூலம் காகிதாதிகள் வீணாவதினை, தவிர்ப்பதற்கும், நிதியினை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கும் பூரணமான ஒத்துழைப்பினை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

6. Email ஊடாக மேற்கொள்ளப்பட வேண்டிய தகவல் பரிமாற்றங்கள் மட்டுமே அனுப்பட வேண்டும். மேலும் மூலப்பிரதியாகவே அனுப்ப வேண்டிய ஆவணங்களினை Email ஊடாக அனுப்புவதனை தயவுசெய்து தவிர்க்கவும். (**உதாரணமாக கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் மற்றும் உறுதிச்சீட்டுக்களுக்குரிய ஆதார ஆவணங்கள், மதிப்பீடுகள், செயலாற்றுகை தரங்கணிப்பு போன்றவை…**)

7. சகல மாவட்ட கிராம அபிவிருத்தி அலுவலர்களினதும், பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களினதும், வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தினதும் இலத்திரனியல் தபால் முகவரி (**User ID**) இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

8. இவ் சுற்றறிக்கை 02/2017 ஆனது **01/03/2017** இல் இருந்து இத்தால் நடைமுறைக்கு வருகின்றது. இதனை நடைமுறைப்படுத்துவதற்கு சகல உத்தியோகத்தர்களினதும் ஒத்துழைப்பும் வேண்டப்படுகின்றது.

ஜே.ஜே.சி.பெலிசியன்
பணிப்பாளர்
கிராம அபிவிருத்தி
வடக்கு மாகாணம்

ஜே.ஜே.சி. பெலிசியன்

பணிப்பாளர்

கிராம அபிவிருத்தித் திணைக்களம்

வடக்கு மாகாணம்.

பிரதி 1. **பிரதம செயலாளர்**, வடக்கு மாகாணம். - **தயவுடன் தங்களின் தகவலுக்காக.**

2. **செயலாளர்**, மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக வாணிப, கிராம அபிவிருத்தி,வீதி அபிவிருத்தி மற்றும் மோட்டார் போக்குவரத்து அமைச்சு,வடக்கு மாகாணம்.

இல.340, பருத்தித்துறை வீதி
ஆனைப்பந்தி, நல்லூர். யாழ்ப்பாணம்.

අංක.340, පේදුරු තුඩුව පාර.
ආනෛප්පන්ති. නල්ලූර්. යාපනය

No.340, Point Pedro Road
Anaippanthi. nallur, Jaffna

பணிப்பாளர் / අධ්‍යක්ෂිකා / Director 021 320 2275
அலுவலகம் / කාර්යාලය / Office 021 205 7108
தொலைநகல் / ෆැක්ස් / Fax 021 205 7109
மின்னஞ்சல் / ඊ-මේල් / E-mail nprural@gmail.com

கிராம அபிவிருத்தி திணைக்களம்
வடக்கு மாகாணம்
ග්‍රාම සංවර්ධන දෙපාර්තමේන්තුව
උතුරු පළාත
DEPARTMENT OF RURAL DEVELOPMENT
NORTHERN PROVINCE

உமது இல. / ඔබේ අංකය / Your No.

எனது இல. / මගේ අංකය / My No. NP/19/11/Dept/cir

- தயவுடன் தங்களின் தகவலுக்காக.

3. அரசாங்க அதிபர் ……………………………………
   - தயவுடன் தங்களின் தகவலுக்காகவும் , வழிப்படுத்துவதற்காகவும்

4. பிரதேச செயலாளர்……………………………….
   - தயவுடன் தங்களின் தகவலுக்காகவும், செயற்படுத்த

உதவுவதற்காகவும்

இல.340, பருத்தித்துறை வீதி
ஆனைப்பந்தி, நல்லூர். யாழ்ப்பாணம்.
අංක.340, පේදුරු තුඩුව පාර.
ආනෛපප්පන්ති. නල්ලූර්. යාපනය
No.340, Point Pedro Road
Anaippanthi. nallur, Jaffna

பணிப்பாளர் / අධ්‍යක්ෂිකා / Director: 021 320 2275
அலுவலகம் / කාර්යාලය / Office: 021 205 7108
தொலைநகல் / ෆැක්ස් / Fax: 021 205 7109
மின்னஞ்சல் / ඊ-මේල් / E-mail: nprural@gmail.com